பாதுகாப்பு அமைச்சு

# 2023/2024 வருடத்தில் பாவிக்கமுடியாத பொருட்கள் மற்றும் பண்டங்கள் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல்

2023-09-01ஆம் திகதி முதல் 2024-08-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்பு அமைச்சு அல்லது அதனோடிணைந்த நிறுவனங்களில் பாவிக்கமுடியாத பொருட்கள் மற்றும் பண்டங்களை ஏலவிற்பனை/ கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக கொள்வனவாளர்களைப் பதிவு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பம் செய்வதற்கு இலங்கையில் வதியும் நபர்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் தகுதியைப் பெறும்.

இதன்பொருட்டு 2023-06-13ஆம் திகதி முதல் 2023-06-26ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களால் 2023-06-27ஆம் திகதி முன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2023-06-26ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை (சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில்) பாதுகாப்பு அமைச்சின் www.defence.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பதாரர்களால் 2,000.00 ரூபா மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். அக்கட்டணத்தை ‘‘செயலாளர், பாதுகாப்பு அமைச்சு’’ பெயரில் இலங்கை வங்கி 7040119 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து, குறித்த வங்கிப் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமை உறுதி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பதிவுக் கட்டணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டு சகிதம் 2023-06-27ஆம் திகதிக்கு முன் கணக்காளர் (வருமானம் மற்றும் ஆதன முகாமைத்துவம்), பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பாவிக்கமுடியாத பொருட்கள் மற்றும் பண்டங்கள் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பாதுகாப்புச் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு.**

# பாதுகாப்பு அமைச்சு

## 2023/2024 ஆம் ஆண்டிற்கான அகற்றும் பொருட்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவாளர்கள் பதிவுக்கான விண்ணப்பம்

1. கொள்வனவாளரின் பெயர் அல்லது வியாபாரத்தின் பெயர் -

……………………………………………………………………………………………..

2. கொள்வனவாளர் அல்லது வியாபாரத்தின் முகவரி –

……………………………………………………………………………………………..

3. கொள்வனவாளரின் தே.அ.அட்டை இலக்கம் அல்லது வணிகப் பதிவு இலக்கம் -

.......................................................................................................................................

(நகல் இணைக்கப்பட வேண்டும்)

4. தொலைபேசி இலக்கம்- ..........................................................

5. தொலைநகல் இலக்கம் - ......................................................

6. மின்னஞ்சல் முகவரி - ............................................................

7. தொடர்புகொள்ளும் நபரின் விவரங்கள்-

| பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| | |

மேலே உள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானது என்று நான் சான்றளிக்கிறேன்.

................................
ஒப்பம்

திகதி - 2023.06.